பாம்பாட்டிச் சித்தர் பாடல்

உ

திருச்சிற்றம்பலம்.

பாம்பாட்டிசித்தர் பாடல்.



சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

இதன் விலை பை - 9.

உ

கடவுள்துணை.

பாம்பாட்டிசித்தர்பாடல்.

கடவுள்வணக்கம்.

தெளிந்துதெளிந்துதெளிந்தாடுபாம்பே சிவன்
சீர்பாதங்கண்டுதெளிந்தாடுபாம்பே
ஆடுபாம்பேதெளிந்தாடுபாம்பே சிவன்
அடியிணைகண்டோமென்றாடுபாம்பே. க

நீடுபதநமக்கென்றுஞ்சொந்தமென்றே
நித்தியமென்றேபெருமுத்தியென்றே
பாடுபடும்போதுமாதிபதநினைந்தே
பன்னிப்பன்னிப்பரவிநின்றாடுபாம்பே. உ

பொன்னிலொளிபோலவெங்கும்பூரணமதாய்ப்
பூவின்மணம்போலத்தங்கும்பொற்புடையதாய்
மன்னும்பலவுயிர்களின்மன்னியபொருந்தும்
வள்ளலடிவணங்கிநின்றாடுபாம்பே. ௩

எள்ளிலெண்ணெய்போலவுயிரெங்குநிறைந்த
ஈசன்பதவாசமலரொண்ணியெண்ணியே
உள்ளபடியன்புபத்தியோங்கிநிற்கவே
ஒடுங்கியடங்கித்தெளிந்தாடுபாம்பே. ௪

அண்டபிண்டந்தந்தவெங்களாதிதேவனை
அகலாமலேநினைத்தன்புடன்பணிந்
தெண்டிசையும்புகழ்ந்திடவேத்தியேத்தியே
ஏகமனமாகநாடியாடுபாம்பே. ரு

சோதிமயமானபரிசுத்தவஸ்துவைத்
தொழுதழுதாவலறித்தொந்தோமெனவே

நீதிதவறுவழியினின்றுநிலையாய்
நினைந்துநினைந்துருகியாடுபாம்பே.

அருவாயுமுருவாயுமாதியாயும்
அந்தமாயுமொளியாயுமாகமமாயும்
திருவாயுங்குருவாயுஞ்சிவனாயும்
செறிந்தவஸ்துவைப்போற்றியாடுபாம்பே.

சுட்டிக்காட்டவொண்ணாதபாழ்சூனியந்தனைச்
சூட்சமதியாலறிந்துதோஷமறவே
எட்டிபிடித்தோமென்றானந்தபாம்பை
யெடுத்துவிரித்துநின்றாடுபாம்பே.

எவ்வுயிருமெவ்வுலகுமீன்றும்புறம்பாய்
இருந்துதிருவிளையாட்டெய்தியும்பின்னர்
அவ்வுயிருமவ்வுலகுமாகியுநின்ற
ஆனந்தவெள்ளங்கண்டாடுபாம்பே.

குருவணக்கம்.

சாற்றுமுடல்பொருளாவிதத்தமாகவே
தானம்வாங்கிநின்றவெங்கள்சற்குருவினைப்
போற்றிமனம்வாக்குக்காயமூன்றும்பொருந்தப்
புகழ்ந்துபுகழ்ந்துநின்றாடாய்பாம்பே.

பொய்ம்மதங்கள்போதனைசெய்பொய்க்குருக்களைப்
புத்திசொல்லிநன்னெறியிற்போகவிடுக்கும்
மெய்ம்மதந்தானின்னதென்றுமேவவிளம்பும்
மெய்க்குருவின்பதம்போற்றியாடாய்பாம்பே.

வேதப்பொருளின்னதென்றும்வேதங்கடந்த
மெய்ப்பொருளைக்கண்டுமனமேவிவிரும்பிப்
போதப்பொருளின்னதென்றும்போதனைசெய்யும்
பூரணசற்குருதாள்கண்டாடாய்பாம்பே.

உள்ளங்கையிற்கனிபோலஉள்ளபொருளை
உண்மையுடன்காட்டவல்ல வுண்மைக்குருவைக்

கள்ளமனந்தன்னைத்தள்ளிகண்டுகொண்டன்பாய்க்
களித்துக்களித்துநின்றாடாய்பாம்பே. கங

அங்கையிற்கண்ணாடிபோலவாதிவஸ்துவை
அறிவிக்குமெங்களுயிரானகுருவைச்
சங்கையறச்சந்ததமுந்தாழ்ந்துபணிந்தே
தமனியப்படமெடுத்தாடாய்பாம்பே. கச

காயநிலையழிகையைக்கண்டுகொண்டுபின்
கற்பநிலையுள்ளிற்கொண்டெக்காலமும்வாழும்
தூயநிலைகண்டபரிசுத்தகுருவின்
துணையடிதொழுதுநின்றாடாய்பாம்பே. கரு

கூடுவிட்டுக்கூடுபாயுங்கொள்கையுடைய
குருவின்வல்லபமெவர்கூறவல்லவர்
வீடுபெறும்வகையைமேன்மேலுங்காட்டு
மெய்க்குருவைப்பணிந்துநின்றாடாய்பாம்பே. கசு

அட்டதிக்குமண்டவெளியானவிடமும்
அடக்கியகுளிகையோடாடிவிரைவாய்
வட்டமிட்டுதலம்வரும்வல்லகுருவின்
மலரடிதஞ்சமென்றாடாய்பாம்பே, கஎ

கற்பகாலங்கடந்தாதிகர்த்தாவோடுங்
கடமழியாதுவாழுங்காரணக்குரு
பொற்பதமேதஞ்சமென்றுபோற்றுதல்செய்து
பூரணசிந்தையோடாடாய்பாம்பே, கஅ

வச்சிரத்திற்கோர்பழுதுவாய்க்குமாயினும்
வல்லுடம்புக்கோர்குறைவுவாய்த்திடாது
மெச்சுகடமுள்ளவெங்கள்வேதகுருவின்
மெல்லடிதுதித்துநின்றாடாய்பாம்பே. ககூ

பாம்பினதுசிறப்பு.

நாதர்முடிமேலிருக்குநாகப்பாம்பே
நச்சிப்பையைவைத்திருக்குநல்லபாம்பே

பாதலத்திற்குடிபுகும்பைகொள்பாம்பே
பாடிப்பாடிநின்றுவிளையாடுபாம்பே. உ௦

வளைபுகும்போதேதலைவாங்கும்பாம்பே
மண்டலமிட்டுடல்வளைவண்ணப்பாம்பே
தலைக்கஞ்சிநின்றிடும்சத்தியபாம்பே
தலையெடுத்தேவிளையாடுபாம்பே. உ௧

குற்றமற்றசிவனுக்குக்குண்டலமானாய்
கூறுந்திருமாலினுக்குக்குடையானாய்
கற்றைக்குழற்பார்வதிக்குக்கங்கணமானாய்
கரவாமலுளங்களித்தாடுபாம்பே. உ௨

மண்டலத்தைத்தாங்குமிகுவல்லமைகொண்டாய்
மாயனுக்குப்படுக்கைக்குவண்ணப்பாயானாய்
கண்டபடைநடுங்கிடக்காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவியாகக்கொண்டாயாடுபாம்பே. உ௩

சந்திரனைச்சூரியனைத்தாவித்தீண்டினாய்
சங்கரனுக்காபரணந்தானுமாகினாய்
மந்திரத்திற்கடங்கினாய்மண்டலமிட்டாய்
வளைந்துவளைந்துநின்றாடுபாம்பே. உ௪

சித்தர்வல்லபங்கூறல்.

எட்டுநாகந்தன்னைக்கைபாலெடுத்தாட்டுவோம்
இந்திரனாருலகத்தையிங்கேநாட்டுவோம்
கட்டுக்கடங்காதபாம்பைக்கட்டிவிடுவோம்
கடுவிஷந்தனைக்கக்கியாடுபாம்பே. உ௫

ஆதிசேடனாகினுமெம்மங்கையினாலே
ஆட்டிவிடுவோமெங்களாக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியேநின்றிடச்செய்வோம்
நின்றநிலைதவறாமலாடுபாம்பே. உ௬

தூணைச்சிறுதுரும்பாகத்தோன்றிடச்செய்வோம்
துரும்பைப்பெருந்தூணாகத்தோற்றச்செய்வோம்

ஆணைப்பெண்ணும்பெண்ணையாணுமாகச்செய்குவோ
ஆரவாரத்தெதிராய்நின்றாடுபாம்பே. (ம்

எட்டுமலைகளைப்பந்தாயெடுத்தெறிகுவோம்
எழுகடலையுங்குடித்தேப்பமிடுவோம்
மட்டுப்படாமணலையுமதித்திடுவோம்
மகராஜன்முன்புநின்றாடுபாம்பே. ௨௮

மண்டலமுற்றுங்கையால்மறைத்திடுவோம்
வானத்தையும்வில்லாகவளைத்திடுவோம்
தொண்டருக்குச்சூனியஞ்சொல்லிக்காட்டுவோம்
தோன்றலுக்குமுன்புநின்றாடாய்பாம்பே, ௨௯

மூண்டெரியுமக்கினிக்குண்மூழ்கிவருவோம்
முந்நீருள்ளிருப்பினுமூச்சடக்குவோம்
தாண்டிவரும்வன்புலியைத்தாக்கிவிடுவோம்
தார்வேந்தன்முன்புநின்றாடுபாம்பே. ௩0

செப்பரியமூன்றுலகுஞ்செம்பொன்னாக்குவோம்
செங்கதிரைத்தண்கதிராய்ச்செய்துவிடுவோம்
இப்பெரியவுலகத்தைஇல்லாமற்செய்வோம்
எங்கள்வல்லபங்கண்டாடுபாம்பே. ௩௧

வேதன்செய்தசிருஷ்டிகள்போல்வேறுசெய்வோம்
வேதனையுமெங்கள்கீழேமேவச்செய்வோம்
நாதனுடன்சமமாகநாளும்வாழ்வோம்
நங்கள்செய்கையிதுவென்றாடாய்பாம்பே. ௩௨

அறுபத்துநாலுகலையாவுமறிந்தோம்
அதற்குமேலொருகலையானதறிந்தோம்
மறுபற்றுசற்றுமில்லாமனமுடையோம்
மன்னனேயாசானென்றாடுபாம்பே. ௩௩

சீறுபுலியானையாளிசிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குக்குற்றேவல்செய்யச்சொல்லுவோம்
வீறுபெருங்கடவுளையெங்களுடனே
விளையாடச்செய்வோமென்றாடாய்பாம்பே. ௩௪

சித்தர் சமவாதம்.

வாசுகியையொருபக்கமன்னநிறுத்து
மகத்தானபதுமனைமறுபக்கம்வை
தேசுலவுதக்கனைத்தன்றிக்கிற்சேரு
செய்யபதுமனைக்கொள்சித்தனாரே. ௩௫

அனந்தனையொருபக்கமாகநிறுத்தி
அதன்பக்கங்குளிகனையண்டச்சேரு
கனங்கொண்டகார்க்கோடகன்காணக்காட்டுங்
கடுஞ்சங்கபாலனைத்தாசித்தனாரே. ௩௬

அட்டதிக்குஞ்சக்கரங்களாகக்கீறி
அக்கோணநிலைகளிலக்கரஞ்சேரு
திட்டமுடன்மந்திரத்தைச்செபித்துநில்லு
சித்தந்தடுமாறாதேசித்தனாரே. ௩௭

அட்டதிக்குஞ்சக்கரங்களமைத்துவிட்டோம்
அவ்வவற்றிற்சக்கரங்களமைத்துவிட்டோம்
எட்டுநாகமிருக்கின்றவிடத்தில்விட்டோம்
இனியென்னசெய்வதுசொல்சித்தனாரே. ௩௮

நடுவாகவாதிசேடன்றன்னைநாட்டு
நான்குதிக்குமந்திரித்தநீறுதூவு
கடுவிஷங்கக்கவேகட்செவிகளைக்
கையிலெடுத்தாட்டுங்கள்சித்தனாரே. ௩௯

பொருளாசைவிலக்கல்.

நாடுநகர்வீடுமாடுநற்பொருளெல்லாம்
நடுவன்வரும்பொழுதுநாடிவருமோ
கூடுபோனபின்பவற்றாற்கொள்பயனென்னே
கூத்தன்பதங்குறித்துநின்றாடாய்பாம்பே. ௪௦

யானைசேனைதேர்ப்பரியாவுமணியாய்
யமன்வரும்போதுதுணையாமோவறியாய்
ஞானஞ்சற்றுமில்லாதநாய்கட்குப்புத்தி
நாடிவரும்படிநின்றாடுபாம்பே, ௪௧

மாணிக்கமாமணிமுடி வாகுவலயம்
மார்பிற்றொங்கும்பதக்கங்கண்மற்றும்பணிகள்
ஆணிப்பொன்முத்தாரமம்பொனக்தக்கடகம்
அழிவானபொருளென்றாடாய்பாம்பே. ௪௨

மாடகூடமாளிகைகள்வண்ணமண்டபம்
மதில்சூழ்ந்தவரண்மனை மற்றுமுள்ளவை
கூடவராவென்றவந்தக்கொள்கையறிந்தோர்
குலவாமல்வெறுப்பாரென்றாடாய்பாம்பே, ௪௩

மலைபோன்றசெம்பொற்குவைவைத்திருப்பவர்
மறலிவருகையில்வாரிச்செல்வரோ
அலையாமலகத்தினையத்தன்பால்வைத்தோர்
அழியாரென்றேதுணிந்தாடாய்பாம்பே. ௪௪

பஞ்சணையும்பூவணையும்பாயலும்வெறும்
பாழ்சுடுகாடதனிலேபயன்பெறுமோ
மஞ்சள்மணம்போய்சுடுகாறுமணங்கள்
வருமென்றுதெளிந்துநின்றாடாய்பாம்பே. ௪௫

முக்கனியுஞ்சர்க்கரையுமோதகங்களும்
முதிர்சுவைப்பண்டங்களுமுந்தியுண்டவாய்
மிக்கவுயிர்போனபின்புமண்ணைவிழுங்க
மெய்யாகக்கண்டோமென்றாடாய்பாம்பே. ௪௬

வண்ணப்பட்டும்வாசனையும்வாய்த்தகோலமும்
வண்கவிகையாலவட்டமற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன்யமபுரஞ்செல்லுங்காலத்தில்
சேரவரமாட்டாதென்றாடாய்பாம்பே. ௪௭

மக்கள்பெண்டீர்சுற்றமநுமக்கண்மற்றவர்
மாளும்போதுகூடவவர்மாள்வதில்லையே
தக்கவுலகனைத்தையுந்தந்தகர்த்தனைத்
தாவித்தாவித்துதித்துநின்றாடாய்பாம்பே. ௪௮

கானலைமானீரெனவேகண்டுசெல்லல்போல்
காசினிவாழ்வினைமூடர்கண்டுகளிப்பார்

மேனிலைகண்டார்கள்வீணாய்வீம்புபேசிடார்
மெய்யன்பதநாடுவாரென்றாடாய்பாம்பே. ௪௯

பெண்ணாசைவிலக்கல்.

வெயில்கண்டமஞ்சள்போன்றமாதரழகை
விரும்பியேமேல்விழுந்துமேவுமாந்தர்
ஒயில்கண்டவிலவுகாத்தோடுங்கிளிபோல்
உடல்போனாலோடுவாரென்றாடாய்பாம்பே. ௫0

செண்டுமுலைவண்டுவிழிகொண்டதோர்கையைச்
சித்தப்பாம்பால்விழுங்கியேசீயென்றொறுத்தோம்
குண்டுகட்டெருமையேறுங்கூற்றுப்பருந்தைக்
கொன்றுதின்றுவிட்டோமென்றாடாய்பாம்பே. ௫௧

வட்டமுலையென்றுமிகவற்றுந்தோலை
மகமேருவென்றுவமைவைத்துக்கூறுவர்
கெட்டநாற்றமுள்ளயோனிக்கேணியில்வீழ்ந்தார்
கெடுவரென்றேதுணிந்தாடாய்பாம்பே. ௫௨

மலஞ்சொரிகண்ணைவடிவாளுக்கொப்பாக
வருணித்துச்சொல்வர்மதிவண்மையில்லாதார்
குலநலம்பேசுகின்றகூகைமாந்தர்கள்
கும்பிக்கேயிரையென்றாடாய்பாம்பே. ௫௩

சிக்குநாறுங்கூந்தலைச்செழுமேகமாய்ச்
செப்புவார்கள்கொங்கைதனைச்செப்புக்கொப்பதாய்
நெக்குநெக்குருகிப்பெண்ணைநெஞ்சினினைப்பார்
நிமலனை நினையாரென்றாடாய்பாம்பே. ௫௪

நாறிவருமெச்சிலினை நல்லமுதென்றும்
நண்ணுஞ்சளிநாசிதனைநற்குமிழென்றும்
கூறுவார்கள்புத்தியில்லாக்கூகைமாந்தர்
கோனிலையையறியாரென்றாடாய்பாம்பே. ௫௫

மயிலென்றுங்குயிலென்றுமாணிக்கமென்றும்
மானேயென்றுந்தேனேயென்றும்வானமுதென்றும்

ஓயிலானவன்னமதிற்கொத்தவளென்றும்
ஓதாமற்கடிந்துவிட்டாடுபாம்பே. ௫௬

மின்னற்கொடியென்றுஞ்சோதிவிளக்கமென்றும்
மெல்லியென்றும்வல்லியென்றுமேனகையென்றும்
கன்னற்கட்டியென்றுஞ்சீனிகற்கண்டென்றும்
கழறுமற்கடிந்தோமென்றாடாய்பாம்பே. ௫௭

பூவையென்றும்வல்லியென்றும்பொன்னேயென்றும்
பூந்திருவேயென்றுமென்றன்பொக்கிஷமென்றும்
கோவையென்றும்கோதையென்றுங்கோகிலமென்றும்
கூறுமற்றுறந்தோமென்றாடாய்பாம்பே. ௫௮

மலக்குடமீதிலேமஞ்சள்பூச்சென்றும்
மல்கும்புழுக்கூட்டின்மேல்வண்ணத்தோலென்றும்
சலக்குழிக்குள்ளேநாற்றஞ்சார்ந்தசேறென்றும்
தானறிந்துதள்ளினோமென்றாடாய்பாம்பே. ௫௯

சரீரத்தின்குணம்.

ஊத்தைக்குழியிலேமண்ணையெடுத்தே
உதிரப்புனலிலேயுண்டைசேர்த்தே
வாய்த்தகுயவனார்பண்ணும்பாண்டம்
வரகோட்டுக்குமாகாதென்றாடாய்பாம்பே. ௬0

இருவர்மண்சேர்த்திடவொருவர்பண்ண
ஈரைந்து மாதமாய்வைத்தசூளை
அருமையாயிருப்பினுமந்தச்சூளை
அரைக்காசுக்காகாதென்றாடாய்பாம்பே. ௬௧

பரியாசம்போலவேகடித்தபாம்பு
பலபேரறியவேமெத்தவீங்கிப்
பரியாரமொருமாதுபார்த்தபோது
பையோடேகழன்றதென்றாடாய்பாம்பே. ௬௨

சீயுமலமுஞ்செந்நீருநிணமுஞ்
சேர்ந்திடுநாற்றக்குடமுடைந்தால்

நாயுநரியும்பேயுங்கழுகும்
நமதென்றேதின்னுமென்றாடாய்பாம்பே. ௩

நீரிலெழுநீர்க்குமிழிநிலைகடல்போல்
நில்லாதுடல்நீங்கிவிடும்நிச்சயமென்றே
பாரிற்பலவுயிர்களைப்படைத்தவன்றனைப்
பற்றறவேபற்றித்தொடர்ந்தாடாய்பாம்பே. ௩

நாறுமீனைப்பலதரநல்லதண்ணீரால்
நாளுங்கழுவினுமகநாற்றம்போமோ
கூறுமுடல்பலகதியாடிக்கொண்டதால்
கொண்டமலநீங்காதென்றாடாய்பாம்பே. ௩

காய்த்தமரமிதுமிகக்கல்லடிபடும்
கன்மவினைகொண்டகாயங்கண்டனைபெறும்
வாய்த்ததவமுடையவர்வாழ்பவரென்றே
வஸ்துத்திருவடிதொழுதாடாய்பாம்பே. ௩

பேசரியநவவாயிற்பீரற்றுருத்தி
பெருங்காற்றுள்புகுந்ததாற்பேச்சுண்டாச்சே
ஈசனிலையறியாருக்கிந்தத்துருத்தி
எரிமண்ணிற்கிரையென்றாடாய்பாம்பே. ௩

மரப்பாவைபோலவொருமண்ணுருச்செய்து
வளமானசீவனென்னுஞ்சூத்திரமாட்டித்
திரைக்குள்ளிருந்தசைப்போன்றீர்ந்தபொழுதே
தேகம்வுழுமென்றுதெளிந்தாடுபாம்பே, ௩

தசநாடிதசவாயுசத்ததாது
சார்ந்தமரக்கப்பலதுதத்திவிழுமே
இசைவானகப்பவினையேகவெள்ளத்தில்
எந்நாளுமோட்டத்துணிந்தாடாய்பாம்பே. ௩

அகப்பற்றுநீக்கல்.

தாமரையினிலையிலேதண்ணீர்தங்காத்
தன்மைபோலச்சகத்தாசைதள்ளிவிட்டெங்கும்

தூயணியாவிளங்கியசோதிபதத்தைத்
தொழுதுதொழுதுதொழுதாடாய்பாம்பே. எ0

கள்ளங்கொலைகாமவாதிகண்டித்தவெல்லாம்
கட்டறுத்துவிட்டுஞானக்கண்ணைத்திரந்து
தெள்ளிதானவெட்டவெளிசிற்சொரூபத்தைத்
தேர்ந்துபார்த்துச்சிந்தைதெளிந்தாடாய்பாம்பே. எக

சொல்லும்புளியம்பழத்தின்றோடுபோலவே
சுற்றத்திருந்தாலுமவர்தொந்தங்களற்று
நில்லுமனதேபரநின்மலத்திலே
நின்றுணைதான்வெறும்பாழென்றாடாய்பாம்பே. எஉ

சேற்றிற்றிரிபிள்ளைப்பூச்சிசேற்றைநீக்கல்போல்
தேசத்தோடொத்துவாழ்பவரச்செய்கைகண்டபின்
சாற்றுபரவெளிதனைச்சாரும்வழியே
தானடக்கவேண்டுமென்றாடாய்பாம்பே. எங

எண்ணைக்குந்தண்ணீர்க்குந்தொந்தமில்லாவாறுபோல்
எப்போதுமிப்புவியிலெய்தவேண்டும்
கண்ணுக்குக்கண்ணானவொளிகண்டுகொள்ளவே
கட்டறுத்துவாழ்ந்திடநின்றாடாய்பாம்பே. எச

கக்கிவிட்டசோறுகறிகந்தமூலங்கள்
கண்களுக்கசுத்தமானகாட்சிபோலவே
சிக்கிக்கொண்டசகத்தினைச்சீயென்றொறுத்துச்
சீர்பாதங்காணத்தெளிந்தாடுபாம்பே. எரு

கோபமென்னுமதயானைகொண்டமதத்தை
கூர்கொள்புத்தியங்குசத்தாற்கொன்றுவிட்டோங்காண்
தீபமென்னுஞ்சிற்சொரூபசெய்யபொருளைச்
சேர்ந்துறவுகொண்டோமென்றாடாய்பாம்பே. எசு

நித்தியமென்னுமலையினின்றுகொண்டம்யாம்
நினைத்தபடிமுடித்துநின்மலமானோம்
சத்தியமாயெங்கள்கூடந்தானழியாதே
சந்ததமும்வாழ்வோமென்றாடாய்பாம்பே, எஎ

மனமென்னுங்குதிரையை வாகனமாக்கி
மதியென்னுங்கடிவாளம் வாயிற்பூட்டிச்
சினமென்னுஞ்சீனிமேற்சீராயேறித்
தெளிவிடஞ்சாரிவிட்டாடாய்பாம்பே.

ஆசையென்னுஞ்செருப்பின்மேலடியைவைத்தே
ஆங்காரமுட்காட்டையறமிதித்தே
காசையெனுந்துற்குணத்திற்களல்கொளுத்திக்
காலாகாலங்கடந்தோமென்றாடாய்பாம்பே.

காலமெனுங்கொடிதானகடும்பகையைக்
கற்பமெனும்வாளினாற்கடிந்துவிட்டோம்
சாலப்பிறப்பிறப்பினைத்தான்கடந்தோம்
தற்பரங்கண்டோமென்றாடாய்பாம்பே.

தேனில்வீழ்ந்தவீயைப்போலச்சிந்தைகுலைந்து
திகையாமற்சிற்சொரூபதெரிசனைகண்டு
வானிற்பறந்திடச்சூதவாணமணிதீர்ந்து
வாயிற்போட்டேகினின்றாடாய்பாம்பே.

தூக்கியபாதங்கண்டேன்சோதிகண்டேன்
சுத்தவெளிக்குள்ளேயொருகூத்தன்கண்டேன்
தாக்கியசிரசின்மேல்வைத்தபாதம்
சற்குருவின்பாதமென்றாடாய்பாம்பே.

ஆலடிப்பொந்திலேவாழ்ந்தபாம்பே
அரசடிபொந்திலேபுகுந்துகொண்டாய்
வாலடிதன்னிலேபார்த்துபார்த்து
வாங்கியேதூங்கிநின்றாடாய்பாம்பே.

நாலுதெருவிலேநாலுகம்பம்
நடுத்தெருவிலேபொன்கம்பம்
போலும்விளங்குபொன்னங்கம்பத்தினுக்கே
பூமாலைசூட்டிநின்றாடாய்பாம்பே.

ஆழிபெயர்ந்தாலுமேருமட்டபலையும்
அடியோடேபெயர்ந்தாலுமன்றிக்கால

ஊழிபெயர்ந்தாலுமாதியுண்மைபடிக்கே
வுறுதிபெயராதுநின்றாடாய்பாம்பே ௬௫

வாயுவினையினையாக வாங்கியுண்டே
வாரிஷிக்குநீரினை வாயுண்மடுத்தே
தேயுவினிற்குளிர்காய்ந்து வெட்டவெளியில்
திகைப்பறச்சேர்ந்துநின் றாடாய்பாம்பே ௬௬

மாசில்கதிவளையிலே மண்டலமிட்டே
மதியானபெரும்பட மடல்விரித்தே
ஆசில்பராபரமான வாதிபதத்தை
அடுத்தடுத்தேதுதித் தாடாய்பாம்பே ௬௭

காடுமலைநதிபதி காசிமுதலாய்
கால்கடுக்கவோடிற்பலன் காணலாகுமோ
வீடுபெறும்வழிதிலே மேவிக்கொள்ளவே
வேதாந்தத்துறையினின் றாடாய்பாம்பே ௬௮

எள்ளளவுமன்பகத்தி லில்லார்தார்முத்தி
எய்துவதுதொல்லுலகி லில்லையெனவே
கள்ளப்புலன்கட்டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழுதேகளித் தாடாய்பாம்பே ௬௯

சூரியனைக்கண்டபனி தூரவோடல்போல்
தொந்தபந்தஞ்சிந்தபரி சுத்ததலத்தில்
ஆரியனைக்கண்டுதரி சித்தேயன்புடன்
அகலாமற்பற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே ௭௰

காந்தம்வலியிரும்புபோல் மாசின்மனதைக்
காட்சியானவஸ்துவுடன் கலக்கச்சேர்த்து
சாந்தமுடன்றேண்டியுந் தாம்பும்போலச்
சலியாமற்றொடர்ந்துநின் றாடாய்பாம்பே. ௭௧

உளியிட்டகற்சிலையி லுண்டோபலன்கள்
உலகத்தின்மூடர்களுக் குண்டோவுணர்ச்சி
புளியிட்டசெம்பிற்குற்றம் போமோவஞ்ஞானம்
போகாதுமூடர்க்கென் றாடாய்பாம்பே ௭௨

திரளானபோரிலூசி தேடல்போன்முத்தி
சிக்காதுதேசாசார தேசிகர்தம்மால்
அருளானமூலகுரு வையர்செயலால்
ஆனந்தங்கண்டோமென் றூடாய்பாம்பே ௯௩

ஏட்டுச்சுரக்காய்க்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைதிரிந்துங்கதி யெய்தலில்லையே
நாட்டுக்கொருகோயிற்கட்டி நாளும்பூசித்தே
நாதன்பாதங்காணார்களென் றூடாய்பாம்பே ௯௪

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறைப்பார்
தன்னையறியாதவரே தன்னைக்காட்டுவார்
பின்னையொருகடவுளைப் பேணநினையார்
பேரொளியைப்பேணுவாரென் றூடாய்பாம்பே ௯௫

பாலிற்சுவைபோலுமெங்கும் பாய்ந்தவொளியைப்
பற்றுப்பொன்மற்றனைத்த பான்மைபோலே
காலிற்சுழிமுனைநின்று கண்டுகொண்டு
களித்துகளித்துநின் றூடாய்பாம்பே. ௯௬

தேக்கெடுத்தேயோடும்வானத் தேனையுண்டபின்
தேகபந்தங்கொண்டனமித் தேசவாழ்வினை
ஒக்காளமென்றெண்ணி யோகையுடனீ
உள்ளத்தெளிந்துநின் றூடாய்பாம்பே ௯௭

சதுர்வேதமாறுவகை சாத்திரம்பல
தந்திரம்புராணங்கலை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேறுநூல்களும்
வீணானநூல்களென் றூடாய்பாம்பே ௯௮

சமயபேதம்பலமான சாதிபேதங்கள்
சகத்தோர்க்கேயல்லதுசற் சாதுகளுக்கோ
சிமயத்திலேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித்தாந்தந்தேர்ந் தாடுபாம்பே ௯௯

பூசைசெய்ததால்சுத்த போதம்வருமோ
பூமிவலஞ்செய்ததானற் புண்ணியமுண்டோ
ஆசையற்றகாலத்திலே ஆதிவஸ்துவை
அடையலாமென்றுதுணிந் தாடாய்பாம்பே

மூலவேரறிந்துகொண்டால் மூன்றுலகமும்
முன்பாகவேண்டுசித்திய முத்திசேரலாம்
சாலவேரறிந்ததாலே தான்பயனுண்டோ
சகத்தைப்பொய்யென்றுதெளிந் தாடாய்பாம்பே. ௲௧

சகத்ராதியென்றிடாது தானநாதியாய்ச்
சமைந்ததென் றுரைப்பார்கள் சத்தையறியார்
மகத்துவநிலைகற்ப வன்மையல்லாது
மற்றும்வன்மையில்லையென் றாடாய்பாம்பே. ௲௨

ஆயிரத்தெட்டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன்
அண்டமெல்லாநிறைந்திடு மற்புதசித்தன்
காயமில்லாதோங்கிவளர் காரணசித்தன்
கண்ணுள்ளொளியானென் றாடாய்பாம்பே ௲௩

நாற்பத்துமுக்கோணநிலை நாப்பணதாக
நாடுமக்கரச்சொரூப நாயகந்தனை
மேற்படுத்திக்கொண்டாலந்த மேலுலகெலா
மெல்லடிக்குத்தொண்டேயென் றாடுபாம்பே. ௲௪

கண்டவர்களொருக்காலும் விண்டவர்களல்
விண்டவர்களொருக்காலுங் கண்டவர்களல்
கொண்டகோலமுள்ளவர்கள் கோணிலைகாணார்
கூத்தாடிக்கூத்தாடி யாடுபாம்பே ௲௫

ஆறுதலக்குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அயல்வீடுபோகுமுன்னே யரண்கோலிக்கொள்
வேறுபட்டாலவன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னேவிடாதுகொண் டாடுபாம்பே ௲௬

எண்ணறியபுண்ணியங்க ளெல்லாஞ் செய்துமென்
ஏகனடிநெஞ்சமதி லெண்ணவிடிலே
பண்ணறியதவப்பயன் பத்தியில்லையேன்
பாழ்படுமென்றேதுணிந் தாடாய்பாம்பே ௲௭

எவ்வுலகுஞ்சொந்தமதா யெய்தும்பயனென்
றெங்களாதபாநாப்புய மெண்ணுக்காலையில்
இவ்வுலகவாழ்வுதானு மின்றேயறுமென்
றெண்ணிக்கர்த்தனடிநினைந் தாடாய்பாம்பே. ௲௮

மணக்கோலங்கண்டுமிக மனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்கினின்றாய்
பிணக்கோலங்கண்டும்பின்னுந் துரவாவிட்டால்
பிறப்புக்கேதுணையென் றாடாய்பாம்பே ௱௯

பிறப்பையுமிறப்பையு மற்றுவிடயான்
பெருமருந்தொன்றுசொல்வேன் பெட்புடன் கேளாய்
திறப்புடன்மனப்பூட்டுஞ் சிந்தைக்கதவும்
திறந்திடும்வகையறிந் தாடாய்பாம்பே ௱௰

இறந்தவரைவரவ ரிஷ்டமானவர்
எய்துமவரிறந்தாரென் றெல்லவர்க்குஞ்சொல்
மறந்தவரொருவரென்றே மண்ணினுள்ளோர்
வகையறிந்திடவேநின் றாடாய்பாம்பே. ௧௧௧

நான்கடிச்செய்யுள்.

ஆகாரமுதலிலேபாம்பதாக
ஆநந்தவடலிலேபடம்விரித்தே
ஊகாரமுதலிலேயொத்தொடுங்கி
ஓடிவகாரத்திலுக்கைநீட்டி
சிகாரங்கிடந்ததோர்மந்திரத்தைச்
சித்தப்பிடாரனற்போதஞ்செய்ய
மாகாரப்பிறப்பையும்வேரறுத்து
மாபயங்கடந்தோமென்றாடாய்பாம்பே ௧௧௨

தந்திரஞ்சொல்லுவார்தம்மையறியார்
தனிமந்திரஞ்சொல்லுவார்பொருளறியார்
மந்திரஞ்செபிப்பார்கள்வட்டவீட்டினுள்
மதிலினைச்சுற்றுவார்வர்பல்காணார்
அந்தரஞ்சென்றுமேவேர்பிடுங்கி
அருளென்னுஞானத்தாலுண்டைசேர்த்தே
இந்தமருந்தினைத்தின்பீராகில்
இனிப்பிறப்பில்லையென்றாடாய்பாம்பே ௧௧௩

கனிமண்ணினாலொருகப்பல்சேர்த்தே
கனமானபாய்மரங்காணநாட்டி

ஒளிபுலந்தன்னையேசுக்காணுக்கி
அறிவென்னுமாதாரச்சீனிதூக்கி
வெளியென்னும்வட்டத்தேயுள்ளடக்கி
வேதாந்தக்கடலினைவெல்லவோட்டித்
தெளிவுறுஞானியாரோட்டுங்கப்பல்
சீர்பாதஞ்சேர்ந்ததென்றாடாய்பாம்பே ௧௧௪

உள்ளத்துக்குள்ளே யுணரவேண்டும்
உள்ளும்புறம்பையுமறியவேண்டும்
மெள்ளக்கனலையெழுப்பவேண்டும்
வீதிப்புனலிலேசெலுத்தவேண்டும்
கள்ளப்புனலைக்கடிந்துவிட்டுக்
கண்ணுக்குமூக்குமேற்காணநின்று
தெள்ளுபரஞ்சோதிதன்னைத்தேடிச்
சீர்பாதங்கண்டோமென்றாடாய்பாம்பே ௧௧௫

ஓங்காரக்கம்பத்தி னுச்சிமேலே
உள்ளும்புறம்பையுமறியவேண்டும்
ஆங்காரக்கோபத்தையறுத்துவிட்டே
ஆநந்தவெள்ளத்தைத்தாக்கிக்கொண்டே
சாங்காலமில்லாமற்றானுவுடனே
சட்டதிட்டமாகச்சேர்ந்துசாந்தமாகவே
தூங்காமற்றூங்கியேசுகமடைந்து
தொந்தோம்தொந்தோமென்றாடாய்பாம்பே. ()

விரகக்குடத்திலேபாம்படைப்போம்
வேதாந்தவெளியிலேவிட்டாட்டுவோம்
கரணங்களைப்பிடுங்கியிரைகொடுப்போம்
காலக்கடுவெளிநின்றாட்டுவிப்போம்
துரகந்தனிலேறித்தொல்லுலகெங்கும்
சுற்றிவலம்வந்துநித்யசூக்ஷங்கண்டும்
உரையற்றமந்திரஞ்சொல்லிமீட்போம்
ஒருநான்கும்பெற்றோமென்றாடாய்பாம்பே. ()

காயக்குடத்திலேநின்றபாம்பைக்
கருணைக்கடலிலேதியங்கவிட்டு

நேயச்சுழிமுனைநீடுபோய்ச்சி
ரிந்தியமானவஸ்துவைவிலக்காடி
மாயப்பெருவெளிதன்னிலேறி
மாசற்றபொருளிலேவாய்க்கத்தேடி
ஆயத்துறைகடந்தப்பாற்பாழின்
ஆநந்தஞ்சேர்ந்தோமென்றாடாய்பாம்பே. ககஅ

மூலத்தலத்திலேநின்றகருத்தை
மூன்றுஞ்சுழிமுனை தன்னிலூடே
மேலத்தலத்திலேவந்துவட்டம்
மேலேவழியிலேமேவிவாழும்
பாலத்தாய்க்கருணையினால்
பரகதிஞானசொரூபமாகி
ஆலச்சயனத்துமாலுடநின்றே
ஆனந்தஞ்சேர்ந்தோமென்றாடாய்பாம்பே ககக

புலனைந்துவீதியில்வையாளியாயும்
புரவியெனுமனதையொன்றுபடுத்தி
மலமந்தவுலகங்கடந்ததாலே
மன்னுகுருபாதத்தின்னிலேநாடித்
தலமைந்துபூலோகங்கடந்ததாலே
சந்திரமண்டலங்கடந்ததாகும்
அலம்வந்துபூலோகக்கடலைநீக்கி
ஆனந்தமாகிநின்றாடாய்பாம்பே கஉ0

குருவென்னுமாசானுருவெடுத்துக்
குறியானஞானத்துபாக்கியாக்கி
அருளென்னுமருளேயுண்டையாக்கி
ஆனந்தமாகவேயதைக்கடந்தே
மருளென்னுமாந்தர்தந்நேரிற்றொட்டு
வாங்காமலெறிந்திட நெட்டையிட்டு
பருவலைக்குள்ளேபட்டதென்றே
பற்றானைப்பற்றிநின்றாடாய்பாம்பே கஉக

கன்னான்குகையிலேகாண்மறிப்போம்
கருமானுலையிலேதிமூட்டுவோம்

சொன்னார்தலையிலேபொன்னாக்குவோம்
சுருதியுறாகல்வியொப்பஞ்செய்வோம்
மின்னார்கள்பாசத்தைவிட்டெரிப்போம்
மெய்ப்பொருட்குறிகண்டுவிருப்படைவோம்
பன்னாதேபன்னாதேசும்மாவிரு
பராபரஞ்சேர்த்தோமென்றாடாய்பாம்பே. ()

சாதிப்பிரிவிலேதீமூட்டுவோம்
சந்தவெளியினிற்கோல்நாட்டுவோம்
வீதிப்பிரிவினில்விளையாடுவோம்
வேண்டாதமனையிலுறவுசெய்வோம்
சோதித்துலாவியேதூங்கிவிடுவோம்
சுகமானபெண்ணையேசுகித்திருப்போம்
ஆதிபிர்ம்மாக்களோர்துபெரும்
அறியார்களிதையென்றாடாய்பாம்பே ௧௨௩

நெட்டெழுத்ததனிலேநிலைபிடித்து
நீங்காவெழுத்திலேவாலைமுறுக்கி
விட்டவெழுத்திலேபடம்விரித்து
விண்ணின்வழியிலேமேவியாடிப்
பட்டவெழுத்தையும்பதிந்திருப்போம்
பன்னிரண்டாமெழுத்தினிற்பன்னிக்கூடிய
திட்டமுடனெமக்கருடேசிகனார்தன்
சீர்பாதம்சேர்ந்தோமென்றாடாய்பாம்பே, ௧௨௪

ஊசிதொளைக்குடத்தினிற்பாம்படைப்போம்
உலகெல்லாஞ்சுற்றியுலாவிவருவோம்
மாசுள்ளபிரவியைமறந்திருப்போம்
மனயொத்தவெளியிலேவிட்டாட்டுவோம்
மாசுப்புலன்களையிரைகொடுப்போம்
மனதுற்றவுச்சியிலேறியாடுவோம்
பேசுமெழுத்தையும்விழுங்கிவிடுவோம்
பிறப்பிறப்பற்றோமென்றாடாய்பாம்பே, ௧௨௫

ஆணிக்குடத்திலேபாம்படைப்போம்
அக்கினிக்கோட்டைமேலேறப்பார்ப்போம்

மாணிக்கத்தூணின்மேல்விட்டாட்டுவோம்
மனம்வாக்குக்காயத்தையிறைகொடுப்போம்
நாணிக்கயிறையுமறுத்திடுவோம்
நமனற்றநாதன்பதநாடியேநிற்போம்
ஏணிப்படிவழிகண்டேறிவிடுவோம்
யாருமிதையறியாரென்றாடாய்பாம்பே. ௧௨௬
வடக்குகிழக்குமாய்நூலிழைப்போம்
மற்றுஞ்சுழலிலேபாவுபூட்டுவோம்
நடக்கும்வழியிலேயுண்டைசேர்ப்போம்
நடவாவழியிலேபுடவைநெய்வோம்
குடக்குக்கறையிலேகோல்போடுவோம்
கொய்ததையெங்குமேவிற்றுவிடுவோம்
அடக்கியேதக்கத்துள்ளேவைக்கவும்வல்லோம்
ஆதிபதங்கண்டோமென்றாடாய்பாம்பே. ௧௨௭
சூத்திரக்குடத்திலேபாம்படைப்போம்
சுழிமுனைக்குள்ளேசுகித்திருப்போம்
பாத்திரங்கொண்டுமேபலியிரப்போம்
பத்தெட்டுமூன்றுபடிகடந்தோம்
ஊத்தைக்கடத்தினைப்புடமிடுவோம்
உளவினையடக்குநல்லுறுதிசொல்லப்
பார்த்துணையிதன்மெய்பலிக்கவெண்ணிப்
பதனம்பதனமென்றாடுபாம்பே, ௧௨௮
மவ்வக்குடத்திலேபாம்படைப்போம்
மணிவட்டவாசியைவாரியுண்போம்
பவ்வக்குடங்களைத்தள்ளிவிடுவோம்
வக்கிரசொர்ப்பனந்தாண்டிவிடுவோம்
மவ்வவெளியிலேவிட்டாடுவோம்
பஞ்சகருவியைப்பலிகொடுப்போம்
சிவ்வுருவாகியேநின்றேமென்றே
சீர்பாதங்கண்டுதெளிந்தாடுபாம்பே. ௧௨௯

பாம்பாட்டிசித்தர்பாடல்
முற்றிற்று.

உ

சிவமயம்.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை பெரிய போஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை எல்லப்ப செட்டிவீதி, 3-வது, ௧௬, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் நாவிலாச அச்சுக்கூடத்தில் தமிழில் தேவையானபுத்தகங்களும் அடியிற் கண்டிருக்கும் புத்தகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

அனுபோகவயித்தியபிரம்மரகசியம்-1-பாகம்விலை 0 8
ஷை இரண்டாம்பாகம் 0 8
ஷை மூன்றாம்பாகம் 0 8
ஷை அனுபோகவயித்தியம் 2-காண்டமும் ஒரேகட்டடமாக வேண்டியவர்க்கு விலை } 0 14
ஷை 3-காண்டமும்ஒரேகட்டடம்வேண்டியவர் 1 4

அன்னை வயற்றில் பிறந்ததுமுதல் வனைபுரத்திற்குப் போமளவும் பிணியில்லாதிருக்கும் நோயில்லாவாழ்வு என்னும் புத்தகம் கிளேஸ்கடிதம் உயர்ந்தபதிப்பு புல்கலிக்கோ பயின்டு செய்திருக்கும்,

புத்தகம் 1-க்கு விலை அணா ,, 12

பதினென்சித்தர்களாகிய அகத்தியர்-நந்தி-போகர்-புலிப்பாணி-கொங்கணர்-ரோமர்-மச்சர்-சட்டர்-பிரமர்- கருவூரார்-அழுகண்ணர்-திருமூலர்-பாம்பாட்டி-இடைக்காடர் - குடுவைளி-அகப்பை-குதம்பை-இராமதேவர்-முதலிய மகான்கள் திருவாய் மலர்ந்தருளிய ஞானச் சுருக்கங்களும், பட்டணத்துப்பிள்ளை பாடலும், ஷை ஞானம்-ா, பட்டணத்தார் புலம்பல், பத்திரகிரியார் புலம்பல், இவையாவும் ஒருங்குதிரட்டி ஞானக்கோவையென திருநாமஞ் சூட்டி அச்சிடலாயிற்று.

புல்பவுண்டுடன் விலை அணா 0 8 0
சிவவாக்கியர்பாடல் 518-சுத்தப்பிரதி 0 4 0
ஷை ஔவைகுறிந்தாபாடல்தனித்தனி 0 9

இதுகட்கு வி-பி, போஸ்டேசார்ஜ் பிரத்தியேகம்.
பதில்வேண்டுவோர் ரிப்ளேகார்ட் அனுப்பவேணும்,

இப்படிக்கு,
நா. க. குப்புசாமிமுதலியார்.